**OS.No.54/2021 P.W.1-ரவிகுமார் 22.08.2025**

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கை நான் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு சொத்து வேண்டுமென்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை செங்கல்பட்டு முதல் காஞ்சிபுரம் நெடுஞ்சாலைக்கு நில எடுப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த இடம் புறம்போக்கு நிலமா என்று கேட்டால் பட்டா நிலமாகும். பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் 6ம் பிரதிவாதி பெயரில் இருந்தது. 6ம் பிரதிவாதி நில எடுப்பு செய்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நில எடுப்பு குறித்து இந்த நீதிமன்றத்தில் மனு கொடுத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்தேன். நில எடுப்பு குறித்து ஆட்சேபனை மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் நில எடுப்பு செய்தபோது உரிய நடவடிக்கை எடுத்தார்களா என்றால் கூரைக்கு மட்டும் தான் இழப்பீடு கொடுத்ததாக சொன்னார்கள். நிலத்திற்கு கொடுக்கவில்லை. உரிய நடவடிக்கையை பின்பற்றி நில எடுப்பு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது பெயரில்தான் உள்ளது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பதிவு உயில் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அது 1938ம் ஆண்டு உயில் பத்திரமாகும். தாவா சொத்திற்கும், எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)